# ECHO OF HIS CALL
# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS


**India's National Spiritual Newspaper**

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

**Vol. XXIX** JANUARY 2024 **No. 01**


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### எரேமியா 31:23-28

23. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, அவர்கள்: நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக் கடவரென்கிற வார்த்தையை யூதாவின் தேசத்திலும் அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள்.

24. அதிலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும் பயிரிடுங்குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள்.

25. நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்.

26. இதற்காக நான் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; என் நித்திரை எனக்கு இன்பமாயிருந்தது.

27. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷ வித்தினாலும், மிருக வித்தினாலும் விதைப்பேன்.

28. அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

# ... என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்!

என்று கர்த்தர் சொல்லுகிறார் - எரேமியா 31:14.

**தங்கள் வாழ்க்கையில் 2024 ஆம் ஆண்டு என்ன நடக்கும் என்று சிந்திக்கும் தேவ பிள்ளைகளிடம் தேவன் இந்த செய்தியின் மூலம் இடைபடுவார்! தயவு செய்து கவனமாக வாசியுங்கள்!**

*Hon. Editor-in-Chief, Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி



சந்தோஷமும், ஆசீர்வாதமும் நிறைந்த ஒரு புதிய ஆண்டாக இவ்வாண்டு (2024) **அழைப்பின் எதிரொலி** குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் இருப்பதாக! என்று உங்களை வாழ்த்துகிறேன்.

**அழைப்பின் எதிரொலி ஊழியங்களைத்** தொடர்ந்து தாங்கி வரும் உங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். கர்த்தருடைய நன்மைகளை நினைத்து, நமது நன்றியை வெளிப்படுத்த அவர் கிருபையாய் இன்னுமொரு வருடத்தை நமக்குக் கூட்டிக் கொடுத்துள்ளார். உலகமெங்கிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களை நம் ஊழியத்தின் மூலம் சந்திக்க உங்கள் ஊக்கமான ஜெபங்களும், அன்பின் காணிக்கைகளுமே காரணம்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call

## வருஷத்தை உம்முடைய நன்மையினால் முடிசூட்டுகிறீர்...

சங்கீதம் – 65:11

கர்த்தருக்குள் எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே!

**கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது** – 1 பேதுரு 1:2



போதகர் அலெக்ஸ் சாம்சன் சாம்

இந்த ஆசிரியர் பகுதியை எழுத உதவி செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்தி அவரைத் துதிக்கிறேன். எனது தந்தை போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள், நமது ஊழியத்தின் பல இடங்களுக்குப் பிரயாணமாகச் செல்வதால், இந்தப் பணியை என்னிடத்தில் ஒப்படைத்துள்ளார்கள். கடந்த பல ஆண்டுகளாக எங்களது பங்காளர்களாகவும், எங்களிடத்தில் அன்பு செலுத்துபவர்களாகவும் இருக்கும் உங்களனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கடந்த டிசம்பர் 2023 இல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத பல மக்களைச் சந்திக்க நமது கர்த்தராகிய ஆண்டவர் அருமையான வாய்ப்புகளை எங்களுக்குத் தந்தார். எங்களது புது வருட ஆராதனைகளையும் ஆசீர்வதித்து தந்தார். புதிய வருடமாகிய 2024 ஆம் வருடம் மென்மேலும் பலன் நிறைந்த ஆசீர்வாதங்களை உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் கொண்டு வரும் என்று நிச்சயமாக நாங்கள் நம்புகிறோம்.

உங்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்து, ஆங்கிலம், தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் தினமும் **அழைப்பின் எதிரொலி யூடியூப் சேனல்** மூலம் அதிகாலை தியானங்களை ஒவ்வொரு நாளும் வெளியிட்டு வருகிறோம். இன்னும் பல மொழிகளில் இதை விரிவாக்கம் செய்ய விரும்புகிறோம். **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** ஆசீர்வாதங்களுக்கு நீங்கள் ஊக்கமாக ஜெபிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.



நெகேமியா வேதாகமக் கல்லூரியின் முக்கிய ஊழியர்கள்

எங்களுக்காக நீங்கள் ஜெபித்து **அழைப்பின் எதிரொலி ஊழியங்களைத்** தாங்கி வருவதற்காக நாங்கள் நன்றியுடையவர்களாய் இருக்கிறோம். இச்சமயத்தில், நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** வகுப்புகள் தமிழிலும், இந்தியிலும் நடத்தப்பட்டு வருகின்றன என்று உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். இந்த புதிய ஆண்டில், ஆங்கிலத்திலும் வகுப்புகளை நடத்தவிருக்கிறோம். வேதாகமக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் புகழ்பெற்ற ஸ்தாபனமான **Asia Theological Association (ATA)**

மூலம் நமது **நேகேமியா வேதாகமக் கல்லூரிக்கு** அங்கீகாரம் பெறும் விஷயம் இறுதி நிலையில் இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம். ஏற்கனவே அந்த ஸ்தாபனத்தில் **பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் (Registered Candidate for Membership)** என்ற அந்தஸ்தை நாம் பெற்றிருக்கிறோம். நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளை** மிகச் சிறந்த முறையில் நடத்தி வரும் நமது உடன் ஊழியர்களுக்காக தயவாய் ஜெபித்துக் கொள்ளுங்கள். நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளை** அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல அவர்கள் மிகவும் உதவியாய் இருக்கிறார்கள்.

மேலும், நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களுக்கான,** 16 மொழிகளில் வெளிவரும் நமது பன்மொழி மாதாந்திர பத்திரிகைக்காகவும், **BIBLECOR** என்ற அஞ்சல்வழி அடிப்படை வேதாகமக் கல்விக்காகவும், **அஞ்சல்வழி இறையியல் கல்விக்காகவும், செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்காகவும்,** சுவிசேஷ அச்சகத்திற்காகவும், நாம் செய்யும் ஏனைய அனைத்து ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.** ... எண்ணாகமம் 6:24–26.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலெக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**
(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

நம்பிக்கை அருளும் நற்செய்தியை இவ்வுலகத்திற்கு அருள நீங்கள் முதலீடு செய்யும் நேரம் மற்றும் கண்ணீரின் ஜெபத்திற்காகவும் நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வருங்கால சந்ததியாரும் கர்த்தரால் நிச்சயமாக ஆசீர்வதிக்கப்படுவீர்கள். இதுவே கர்த்தர் தமது ஜனத்திற்கு கொடுத்துள்ள வாக்குத்தத்தம். இந்த பெரிய வேலைக்காக, நாம் கரங்களைக் கோர்த்து தொடர்ந்து செயல்படுவோம்.

இவ்வுலகத்தில் தெய்வீக ஞானம், அறிவு, ஆரோக்கியம், பெலன், மனச் சமாதானம் ஆகியவற்றோடு வாழ நம் நல்ல தேவன் உங்களுக்கு இவ்வாண்டில் ஞானத்தை அருள வேண்டுமென நான் ஜெபிக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருடைய நன்மைகளால் உங்களைத் திருப்தியாக்க வேண்டுமெனவும் ஜெபிக்கிறேன்.

"**... என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் ...** " என்று எரேமியா 31:14–ல் வேதம் சொல்லுகிறது.

வருடத்தின் துவக்கத்தில் பற்றிக் கொள்ள என்ன அருமையான வாக்குத்தத்தம்! என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள். அப்படி என்றால் நான் திருப்தியற்றவனாக, குறைவுள்ளவனாக, தேவை நிறைந்தவனாக இருக்க மாட்டேன் என்று பொருள்படும். என் தேவைகள் அனைத்தையும் என் தேவன் இவ்வாண்டில் சந்திப்பார். கர்த்தர் அருளும் நன்மைகளினால் திருப்தியாகும் அனுபவத்தைப் பெறும் வருடமாக இவ்வருடம் இருக்கும். ... **தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.** 1 கொரிந்தியர் 2:9. இவ்வாறாகவே இவ்வருடத்தில் தேவன் நம்மை நடத்தப் போகிறார். உங்களுக்கு மகிழ்ச்சியாயில்லையா? நான் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். ஏனென்றால் அவர் தமது வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவராக இருக்கிறார்!

## கர்த்தரின் நன்மைகள்!

நமது பரலோகப் பிதாவாகிய தேவன், அநேக நல்ல காரியங்களால் நம்மை ஏற்கனவே ஆசீர்வதித்திருக்கிறார். இருப்பினும், சாத்தான் நமது மனதை ஆட்கொண்டு நமது பார்வையைத் திரித்து, நம்மைச் சுற்றிலும் உள்ள ஆசீர்வாதங்களைக் காணாமல் இருக்கச் செய்ய முயல்கிறான்.

ஏதேன் தோட்டத்தை உதாரணமாக எடுத்து ஆராய்வோமாக! தேவன் ஆதாமையும், ஏவாளையும் ஆசீர்வதித்து ஆதியாகமம் 1:26, 28, 31 ஆகிய வசனங்களில் இவ்வாறாகக் கூறுகிறார்:

**பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ... பூமியின் மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார் ... பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் ... தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது; ...**

மேலும், ஆதியாகமம் 2:17 இல் தேவன், **ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.**

பூமியில் உண்டாக்கப்பட்ட அனைத்தின் மேலும் நமக்கு அதிகாரம் உண்டு என்று தேவன் கட்டளையிட்டிருந்தார். ஆனால், நம்மைச் சுற்றிலுமுள்ள அனைத்தும், நமது கைபேசி, தொழில்நுட்பம் உட்பட அனைத்தும் நம்மை ஆண்டு கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

சாத்தான் தேவனது வார்த்தையை எப்படி மாற்றிக் கூறுகிறான் என்று கவனியுங்கள்: **அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.** ஆதியாகமம் 3:4,5.

ஆதாமும், ஏவாளும் தாங்கள் சாகவே மாட்டோம் என்றும், தேவனைப் போலவே தாங்களும் மாறிவிடலாம் என்று எண்ணும் வண்ணமாக சாத்தான் எவ்வாறு தேவனது வார்த்தையைத் திரித்துக் கூறுகிறான் என்று இங்கே நாம் பார்க்கலாம். தேவன் மனிதனுக்கு அருளும் நன்மைகளைவிட, சாத்தான் அவனுக்கு வழங்கும் நன்மைகள் பெரியவை என்று சாத்தான் தந்திரமாய் நம்ப வைக்கிறான். இது நமக்குத் தெரிந்தவைதானே? இன்றும்கூட மக்களை தேவனைவிட்டு வேறு பாதையில் வழிநடத்த சாத்தான் இத்தகைய சூத்திரத்தையே கையாளுகிறான். நமது அன்பான இயேசு அருளும் நன்மைகளைவிட அவன் வழங்கும் உலகப் பொருட்கள், மேலானதாகவும், பெரியதாகவும், இன்னும் வலிமையுள்ளதாகவும் இருப்பதாக ஒரு மாயக் காட்சியை சாத்தான் காட்டுகிறான்.

இறுதியாக, பிசாசானவனின் சத்தத்திற்கு ஆதாமும் ஏவாளும் செவி கொடுத்ததும், தங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமானதை இழந்து போனார்கள்.

**அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது;... ஆனால், அவர்கள் தங்களுக்குள்ளே இருந்த சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழந்து, தேவனிடமிருந்து தங்களை ஒளித்துக் கொண்டார்கள்.** (ஆதியாகமம் 3:7–10).

**ஆண்டவராகிய தேவன், ஏதேன் தோட்டத்திலிருந்து அவர்களைத் துரத்தி விட்டு, ஆதாம் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த கட்டளையிட்டார்.** (ஆதியாகமம் 3:23). **... பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும், குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.** ஆதியாகமம் 3:17–19.

அவர்கள் தேவனுடைய நன்மையை இழந்து போனார்கள்!!! தேவனோடிருந்த ஐக்கியத்தின் மகிழ்ச்சியை இழந்து போனார்கள்.

**கர்த்தரின் நன்மைகளைப் பெறுவதினால் மகிழ்ச்சி உண்டாகும்** – (அப்போஸ்தலர் 14:17).

**அவர் (தேவன்) ... வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி,** ... என்று அப்போஸ்தலர் 14:17–ல் வாசிக்கிறோம். இதன் மூலம் அவரது இரக்கமும் நன்மையும் வெளிப்படுகிறது.

'மகிழ்ச்சி', 'சந்தோஷம்' என்று இரண்டு நிலைகளையும் நம்மில் பலர் தவறாகப் புரிந்து கொள்கிறோம். இதன் வித்தியாசத்தை நான் ஆராய்ந்தேன்:

- மகிழ்ச்சி இருதயத்தில் இருக்கிறது. சந்தோஷம் முகத்தில் காணப்படுகிறது.
- மகிழ்ச்சி ஆத்துமாவில் இருப்பது. சந்தோஷம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே.
- மகிழ்ச்சி பிறருக்கும் கடந்து போகும். சந்தோஷம் ஒரு காரியத்தின் விளைவாக மட்டும் காணப்படும்.
- சமாதானத்தையும் திருப்தியையும் மகிழ்ச்சி அணைத்துக் கொள்ளும்.
- மகிழ்ச்சி ஆழமாக சென்று நிரம்பி வழியும். சந்தோஷமோ, மேலோட்டமான கைகுலுக்கல் போன்றது.
- மகிழ்ச்சி நடைமுறையில் வெளிப்படும் குணநலம். அது தானாகவே, கருத்துடன் செய்யப்படும் செயல் போன்றது. சந்தோஷம், தோன்றி விரைவிலேயே கடந்து போய்விடும்.
- மகிழ்ச்சி ஆழமானதும், வசனத்துக்கு ஒத்ததுமாகும். "கவலைப்படாதே, மகிழ்ந்து களிகூரு." சந்தோஷம் ஒரு தைலத்தைப் போன்றது. "கவலைப் படாதே. சந்தோஷமாயிரு."
- மகிழ்ச்சி உள்மனதிலுள்ள உணர்ச்சி. சந்தோஷம், வெளியே காணப்படும் வெளிப்பாடு.
- மகிழ்ச்சி கஷ்டங்களையும் சோதனைகளையும் சகிக்கும். அது அர்த்தமும், நோக்கமும் உள்ளது.

ஒருவர் சந்தோஷத்தை நாடலாம். ஆனால் இறுதியில் மகிழ்ச்சியையே தெரிந்தெடுப்பார்.

பெரும்பாலும் சமாதானமும், மகிழ்ச்சியும் கையோடு கை கோர்க்கும். சமாதானம் இருக்கும்போது மகிழ்ச்சி இருக்கும். மகிழ்ச்சி இருக்கும்போது சமாதானம் இருக்கும். இரண்டும் இரட்டை சகோதரிகள் போலிருக்கும். இந்த மகிழ்ச்சி தேவனது நன்மைகளில் ஒன்று. மகிழ்ச்சியினால் தேவன் நம்மை திருப்தியாக்குவதாக வாக்கு பண்ணியிருக்கிறார். நமது இருதயங்களை மகிழ்ச்சியினால் நிறைக்கிறார்.

**... கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்...** நெகேமியா 8:10.

இருப்பினும், தேவனால் அருளப்படும் நன்மையை நாம் சரியாகப் புரிந்து கொள்ள விடாமல் சாத்தான் தடை செய்கிறான். அன்று ஏவாளை ஏமாற்றியதுபோல நம்மையும் ஏமாற்ற முயல்கிறான். தேவன் நமக்கு அருளும் நன்மைகளைவிட அதிகமாய் ஆசைப்பட சாத்தான் நம்மைத் தூண்டி விடுகிறான். இது கீழ்க்காணும் நிலைமைகளுக்கு நம்மைத் தள்ளிவிடுகிறது:

## 1. திருப்தியற்ற நிலைமை!

தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தவைகளில் ஏவாளுக்குத் திருப்தியில்லை. கர்த்தரின் நன்மைகளைப் பெறுவதற்கு எதிராக நிற்கும் முதல் சத்துரு அதிருப்தி. "எனக்கு அது கிடைத்திருந்தால் நன்றாக இருக்கும்" என்றோ, "எனக்கு இன்னும் வேண்டும்" என்றோ நாம் கூறுவோமானால், கர்த்தர் நமக்கு அருளி உள்ள நன்மைகளைப் பாராட்டவோ அதில் நாம் திருப்தியாகவோ இல்லை என்று அர்த்தமாகிறது. ஆனால் அவற்றைப் பாராட்டுவோமானால், நாம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : தமிழ்

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Certificate in Ministry
Diploma in Theology

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2024 ஜனவரி 19 முதல் பிப்ரவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜனவரி 19 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றமைக்காக ...

ஜனவரி 20 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 21 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 22 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 23 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரிகள்** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்விகள்** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 25 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஜனவரி 26 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக...

ஜனவரி 27 ⇨ நமது பணித்தள விசுவாசிகளையும் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஜனவரி 28 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

ஜனவரி 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நல்ல உடல்நலத்துடனும் தேவபாதுகாப்புடனும் இருப்பதற்காக ...

ஜனவரி 30 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...

ஜனவரி 31 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து வருகிறதற்காக ...

பிப்ரவரி 01 ⇨ நமது பங்காளர்களின் ஜெபம் மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...

பிப்ரவரி 02 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக..

பிப்ரவரி 03 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

பிப்ரவரி 04 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

பிப்ரவரி 05 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

பிப்ரவரி 06 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களின் பாதுகாப்பிற்காக ...

பிப்ரவரி 07 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி யூடியூப் சேனலில்** தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் நற்செய்தி கூடுதலான இதர மொழிகளில் ஒளிபரப்பாக வேண்டி...

பிப்ரவரி 08 ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் கற்பித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள சகஊழியர்களுக்காக ...

பிப்ரவரி 09 ⇨ இஸ்ரேல், பாலஸ்தீனம், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் சமாதானம் பரவ ...

பிப்ரவரி 10 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** நூலக புத்தகங்கள் KOHA software-ன் மூலமாக பதிவேற்றப்படுவதற்காக...

பிப்ரவரி 11 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

பிப்ரவரி 12 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

பிப்ரவரி 13 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி ...

பிப்ரவரி 14 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

பிப்ரவரி 15 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்திட...

பிப்ரவரி 16 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

பிப்ரவரி 17 ⇨ இந்த வருடத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க...

பிப்ரவரி 18 ⇨ கொரோனா வைரஸ் மற்றும் புதிய தொற்றுக்கள் உலகத்தை விட்டு ஒழிய...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.** என்று ரோமர் 15:13 இல் வாசிக்கிறோம்.

அதிருப்தி நம் மகிழ்ச்சியைத் திருடிவிடும். இது தேவன் அருளிய வாக்குத்தத்தத்திற்கு எதிர்மறையானது. மாறாக, தேவன் அருளும் நன்மைகளால் நாம் திருப்தியடையக் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வருடத்தின் துவக்கத்திலேயே, தேவன் நமக்கு அருளியுள்ளவைகளில் சந்தோஷமாயிருக்கக் கற்றுக் கொள்வோம்; திருப்தியின் ஆவியை வளர்த்து நன்றியுள்ள இருதயமுள்ளவர்களாய் இருப்போம்.


## 2. ஏமாற்றம்!

நமது மகிழ்ச்சியை நீக்கிவிட சாத்தான் உண்டாக்கும் வேறொரு மாயைதான் இந்த ‘ஏமாற்றம்’.

நாம் ஜெபிப்பது போலவே அல்லது எதிர்பார்ப்பது போலவே தேவன் நம் ஜெபங்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நமது விருப்பங்கள் நிறைவேறவில்லை என்றால், நாம் ஏமாற்றம் அடைந்து சோர்ந்து விடுகிறோம். நாம் சந்திக்கும் பிரச்சனைகள் மேலும் நம்மை அழுத்தி கீழே தள்ளுவது போல தோன்றுவதால் நாம் ஏமாற்றம் அடைகிறோம். உதாரணமாக, ஏதோ ஒரு வேலை அல்லது பதவி உயர்வு நமக்கு கிடைத்தாலும், அதோடு சேர்ந்து சில சவால்களும், மன அழுத்தமும் வருகின்றன. பணிச்சுமை தாங்க முடியாததாக இருப்பதால், நாம் முதலில் நினைத்தது போல் இருக்காது. இது இப்படி இருக்கும் என்று நினைத்தேன். அது அப்படி இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சிந்திக்கத் தொடங்குவோம்.

மன அழுத்தம் கொடுக்கும் சூழ்நிலைகள், இதுவரை சந்திக்காத எதிர்பார்ப்புகளைக் கொடுத்து, நாம் அறியாமலேயே புலம்பவும் குறைகூறவும் தொடங்கி விடுவோம். இவ்வாறு நடக்கும்போது நாம் நமது மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் இழந்துவிடுவோம். எனதருமை நண்பரே, இத்தகைய நிலைமையை தேவன் சகிக்க மாட்டார்.

எகிப்தை விட்டு இஸ்ரவேலர் வெளியே வந்தபோது இவ்வாறான அனுபவத்தை அவர்கள் பெற்றனர். 430 வருடங்களாகக் கர்த்தரை நோக்கி அவர்கள் கூப்பிட்ட பின், ... **கர்த்தர் பகலில் அவர்களை**



**மேக மற்றும் அக்னி ஸ்தம்பமாய் நிற்கும் கர்த்தர்!**

**வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.** யாத்திராகமம் 13:21. அவர்கள் மகிழ்ச்சியால் நிறைந்து யாத்திராகமம் 15 ஆம் அதிகாரம் முழுவதிலும் தேவனைத் துதித்தார்கள். அவர்கள் நடனமாடி, பாடி, மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.

நீங்கள் தேவனிடத்தில் நெருங்கும் போது சாத்தான் சவால்களையும், மாற்றுவழிகளையும் உங்கள் பாதையில் கொண்டு வருவான். **மூன்று நாட்கள் குடிக்க தண்ணீர் கிடைக்காமல் வனாந்தரத்தில் இஸ்ரவேலர் நடந்தார்கள்** (யாத்திராகமம் 15:22). அவர்கள் முறுமுறுக்கத் தொடங்கினார்கள். அடிமைத்தனம், சாபம் போன்றவற்றிலிருந்து தேவன் அவர்களை வெளியே வரச்செய்து விடுதலை கொடுத்த அவரது நன்மைகளை அவர்கள்



**முறுமுறுக்கத் தொடங்கிய இஸ்ரவேலர்**

மறந்தார்கள். நாமும் குறுகின நினைவாற்றலைப் பெற்றவர்கள் போல, தேவன் நமக்கு அளித்துள்ள நன்மைகளை எளிதில் மறப்பது துரதிர்ஷ்டம்.

**அவர்கள் முறுமுறுக்கத் தொடங்கினார்கள்** (யாத்திராகமம் 15:24). தேவன் நமக்கு அருளியுள்ள நன்மைகளையெல்லாம் மறந்து எத்தனை முறை அவருக்கெதிராய் முறுமுறுத்திருப்போம்? மூன்றே நாட்கள் அவர்கள் எதிர்பார்த்ததுபோல தண்ணீர் கிடைக்காததால், பெரிய ஏமாற்றம் அடைந்தார்கள். ஏமாற்றங்கள் நமது மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் திருடிவிடும்.

ஆனால் கர்த்தருடைய வழிகளும் நினைவுகளும் நம்முடைய வழிகள் மற்றும் நினைவுகளைவிட உயர்ந்தவை. தேவன்

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....


**முழுநேர இந்தி வகுப்புகள்**
**நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.**

**வேளச்சேரி, சென்னை**

**போதனா மொழி : இந்தி**

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Ministry**
**Diploma in Theology**

**கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
**மின்னஞ்சல் :** sam@echoofhiscall.org /**இணையதளம் :** www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ். | | |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 24. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |




# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)



## சென்னையில் உள்ள கலங்கரை விளக்கம்!

### வெகு சீக்கரத்தில், உன் இருளடைந்த வாழ்க்கை மகாப் பிரகாசமானதாக மாறும்!

பல வருடங்களுக்கு முன் என் ஊழியத்தில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கங்களால், நான் வெகுவாய் பாதிக்கப்பட்டேன். "இவ்வளவுப் பெரியப் பாதிப்புகள் வரும் என்று முன்னமே தெரிந்திருந்தால் நான் உலக மனிதனாகவே வாழ்ந்து ஊழியத்திற்கு வராமல் என்னை துன்புறுத்தின மக்களை என் சுய பெலத்தால் சந்தித்து, பொருளாதாரக் காரியங்களை மற்ற உலக மனிதர்கள் கையாளுவதைப்போல குறுக்கு வழிகளில் கையாண்டு நிம்மதியாய் வாழ்ந்திருப்பேனே!" என்றும், "ஊழியத்திற்குள் வந்தது நான் எடுத்தத் தவறான சுய தீர்மானமோ?" என்றும் பல கேள்விகளுடன் மனம் கலங்கி நின்றேன்.

அப்போது இரவு சுமார் 10 மணி இருக்கும். மகா வேதனையுடன் சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கத்திற்கு எதிரில் சற்று தூரத்திற்கு அப்பால் வழக்கம் போல் முழங்காலில் நின்று நீண்ட நேரமாக ஆண்டவரிடம் போராடி ஜெபித்துக் கொண்டிருந்தேன். அந்தக் கஷ்டமான சூழ்நிலையில் என்னுடன் துணை நிற்க யாருமில்லை. எல்லாரும் என்னைவிட்டு ஓடிவிட்டார்கள். ஆகவே என் கண்கள் நேரடியாக அந்தக் கலங்கரை விளக்கை நோக்கின. அதில் விசேஷம் என்னவென்றால், கடலில் இரவில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் தரைக்கு வருவதற்கு வழித் தெரியும்படியாக அந்தக் கலங்கரை விளக்கத்தின் உட்பகுதியில் உள்ள விளக்கு ஒரு குறிப்பிட்ட வேகத்தில் சுழன்று கொண்டு இருந்தது. அப்படி சுழலும்போது சுமார் 15 வினாடிகள் பிரகாசமான வெளிச்சம் தெரிந்தது. அதைத் தொடர்ந்து சுமார் 10 வினாடிகள் அந்த விளக்கு இருளடைந்த நிலையை அடைந்தது. இப்படியாக வெளிச்சமும், இருளும் மாறி மாறி வருவதைக் கண்டபோது அது எனக்குள் ஓர் தைரியத்தையும், புதிய வெளிப்பாட்டையும் கொடுத்தது மட்டுமின்றி, "வெகு சீக்கரத்தில் உன் இருளடைந்த வாழ்க்கை மகாப் பிரகாசமானதாக மாறும்" என்று ஆண்டவர் என்னிடம் மிகவும் திட்டமாகப் பேசினார்.



அன்பரே, நீங்கள் மிகுந்த பிரச்சினையிலும் கஷ்டத்திலும் இருக்கிறீர்களா? நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்கள் வாழ்க்கையில் வெளிச்சம் வந்தாலும் சரி, இருள் உங்களை சூழ்ந்து கொண்டாலும் சரி, தேவன் உங்களை தப்புவிக்க வல்லவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம்முடைய ஆதிமுற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரது தேவன். அவர் உங்கள் கரங்களைப் பிடித்து உங்களைப் பாதுகாத்து ஆசீர்வதிப்பார். அவரை ஊக்கமாக விசுவாசியுங்கள்.

*******

---

... 6-ம் பக்கத் தொடர்ச்சி



பன்னிரெண்டு நீரூற்றுகளுடன் கூடிய பேரீச்சமரங்கள்

அவர்களுக்காக, ஒரு ஊற்று அல்ல, **12 ஊற்றுகளை ஆயத்தம் பண்ணியிருந்தார்** (யாத்திராகமம் 15:27). ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒன்று என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்குள்ளே சண்டை வரக்கூடாது என்று தேவன் முன்னறிந்து, அவர்கள் அந்த ஊற்றுகளண்டையில் பாளையம் இறங்க, தாராளமாகத் தண்ணீரை ஏற்படுத்தினார்.

நாம் வேதபுத்தகத்தை ஆராய்ந்து பார்த்தால், பல ஏமாற்றங்கள் வழியேதான் அநேக முக்கியமான தேவ பிள்ளைகள் கடந்து சென்றிருக்கின்றனர். ஆபிரகாம், நோவா, யாக்கோபு, சாமுவேல், ஏலி, அன்னாள், எரேமியா, தாவீது, யோபு, நெகேமியா, பேதுரு, பவுல் போன்ற இன்னும் பல தேவ ராஜ்யத்தின் பிள்ளைகள் ஏமாற்றங்களையும், நொறுங்கின அனுபவங்களையும் பெற்றுள்ளனர். இத்தகைய போராட்டங்கள் வழியேதான் அவர்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, இறுதியில் தேவனோடுள்ள அவர்களது உறவில் வளர்ச்சியை அடைந்தார்கள். அவர்களது ஏமாற்றங்களின் மத்தியில், தேவன் அவரது திட்டத்தை அவர்களில் நிறைவேற்றினார். இந்த புத்தாண்டில் உங்கள் வாழ்க்கையிலும் தேவன் இவ்வாறு செய்ய வல்லவராயிருக்கிறார். தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. உங்கள் ஏமாற்றங்கள், உடைக்கப்பட்ட நேரங்கள் மத்தியிலும் அவரது திட்டத்தை அவர் உங்களில் நிறைவேற்றுவார். ஏமாற்றத்துடன் இன்று இருக்கிறீர்களா? உடைந்துபோனதுபோல் காணப்படுகிறீர்களா? நம்பிக்கையோடு இருங்கள். நடப்பவைகளுக்குப் பின்னால் தேவன் கிரியை செய்து வருகிறார். நம்பிக்கையை தளரவிட்டுவிடாதீர்கள். அவரது உள்ளங்கை

களில் உங்களை வரைந்து வைத்திருக்கிறார். அவர் உங்களை மறக்க மாட்டார். உங்கள் வாழ்க்கையில் அவர் செய்ய ஆரம்பித்ததை, அவர் நிச்சயமாக முடித்து காட்டுவார்.

## 3. ஊக்கமின்மை!

கர்த்தருடைய நன்மைகளை நம் வாழ்விலிருந்து திருட, சாத்தான் பயன்படுத்தும் மூன்றாவது ஆயுதம்தான் 'ஊக்கமின்மை'.

மார்த்தாளும், மரியாளும் இயேசுவிடம் ஒருமுறை இவ்வாறாகப் புகார்



இயேசு கிறிஸ்துவிடம் புகார் செய்யும் மார்த்தாளும், மரியாளும்!

செய்தார்கள்: ... **ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான்...** யோவான் 11:32. சில நேரங்களில், சில நஷ்டங்களை தேவன் அனுமதிக்கிறார். நமக்கு அன்பானவர்களை நாம் சில சமயம் இழந்து விடுகிறோம். கடந்த வருடத்தில் நம்மில் சிலர் இத்தகைய அனுபவத்தின் வழியாகக் கடந்து போயிருக்கலாம். அது நம்மை அளவற்ற நிலையில் ஊக்கமிழக்கச் செய்திருக்கலாம். ஏன் கர்த்தர் தலையிட்டு அதைத் தடுக்கவில்லை? ஏன் என் ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்கவில்லை என்று நாம் கேள்வி கேட்கிறோம். இருப்பினும், வேதம் ஒன்றினை நமக்கு ஞாபகப்படுத்துகிறது: **இயேசு கண்ணீர் விட்டார்.** யோவான்11:35. நமது வேதனை, கண்ணீர், நொறுங்குதல் போன்றவைகளைப் புரிந்து கொள்ளும் ஒரு பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார்: **நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.** எபிரெயர் 4:15.

நீங்கள் அழும்போது இயேசுவும் அழுகிறார். நீங்கள் அனுபவிக்கும் அதே வலியை அவரும் உணர்கிறார். உங்கள் போராட்டத்தின் மத்தியில் அவர் இருக்கிறார். உங்கள் போராட்டம் உங்களுக்கு அதிக விசுவாசத்தை அளிக்கும் என்று அவர் அறிகிறார். ஆகையால், சோர்ந்து போகாதீர்கள். பெத்தானியாவுக்குச் செல்ல தேவன் தாமதித்தார். ஏனென்றால் நம் விசுவாசத்தை அதிகரிக்கவும் அவரே நம் வாழ்வின் அதிகாரி, நம்மை உண்டாக்கினவர் என்பதை வெளிப்படுத்தவுமே அவ்வாறு செய்தார். ... **நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் ...** யோவான் 11:25. இந்த சத்தியத்தை வெளிப்படுத்திக் காட்டவே யாராவது ஒருவர் – ஒரு சகோதரன், ஒரு நண்பன், ஒரு மகன், கணவர் அல்லது தகப்பன் மரிக்க வேண்டிய அவசியமாயிருக்கிறது. அந்த மரணத்தின் மூலம், நாம் சோர்ந்து போகாமல் அவரையே பற்றிக் கொள்வது எப்படி என்று கற்றுக் கொடுக்கிறார். **என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.** யாக்கோபு 1:2,3 என்று வேதம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. எனவே நாம் நம் விசுவாசத்தை விட்டுவிடக்கூடாது. **நாம் வெளியேறி ஓடுபவர்கள் அல்ல!**

கடந்த காலத்தில் நீங்கள் நம்பிக்கையிழந்து விட்டவைகளை மீண்டும் துவங்க தேவன் உங்களுக்கு உதவுவார். மீண்டும் கட்டும் ஒரு வருடமாக இந்த வருடம் இருக்கும். முழுமை பெறாதவைகளை அல்ல, முழுமை பெற்றவைகளைக் காணும் வருடமாக இவ்வருடம் இருக்கும்.

உங்கள் போராட்டங்கள், தோல்விகள், அவமானங்கள், நஷ்டங்கள் நடுவில் தேவன் உங்களோடு நடந்து வருகிறார். அக்கினியின் நடுவில் நடந்த நான்காவது நபராக அவர் உங்களோடு இருக்கிறார். உங்கள் ஊக்கமான விசுவாசத்தின் பலனைக் காணும் வருடமாக இவ்வருடத்தை நீங்கள் காண்பீர்கள்.

எனது அன்பு சகோதர, சகோதரிகளே! போராட்டங்கள், ஏமாற்றங்கள், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் நீக்கி விடும். துக்கம், திட்டமிட்டபடி நடக்காத சூழ்நிலைகள் போன்ற நிலைமைகளை சந்திக்கும் நேரங்களில், அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். இதைத்தான் வேதாகமம் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. இவை அனைத்து சூழ்நிலைகளிலும் நம்மோடு கூட இருக்கும் பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். அக்கினியின் நடுவில் என்னோடு, உங்களோடு நிற்கிற இன்னொருவர் இருக்கிறார். கர்த்தருடைய நன்மைகள், அவை அனைத்தின் மத்தியிலும், சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் நமக்கு கொண்டு வரும். ஏனென்றால் அவர் சமாதானப்பிரபு!

**நீங்கள் தனிமையாய் இல்லை. எதையும் நீங்கள் தனிமையாய்ச் சந்திக்க தேவையில்லை. விட்டுவிடாதே! ஊக்கமாய் நிலைத்திரு! எங்கே விழுந்தாயோ, அவ்விடத்திலிருந்து எழுந்திரு! சாத்தான் பொய்களைக்கூறுவான். அவைகளைக் கேட்காதே. கர்த்தருக்குத் தெரிந்துதான் அனுமதிக்கிறார்!**

************


# தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின் நெகேமியா வேதாகமக் கல்லூரி**
(ATA Candidate)

1. **DEAN (Residential):**
   அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th.
2. **VICE-PRINCIPAL:**
   அனுபவத்துடன் கூடிய ஆங்கிலம் / தமிழ் / இந்தி இறையியலாளர் M.Div. / M.Th. & experience.
3. **CO-ORDINATOR:**
   கம்ப்யூட்டர் தெரிந்த மற்றும் ஆங்கிலம், தமிழ் & இந்தி தட்டச்சு திறமையுள்ள ஒருங்கிணைப்பாளர்.

தகுதியுள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை (Bio-Data) அனுப்ப வேண்டிய முகவரி:
E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858

# தேவை
# நூலகப் புத்தகங்கள்

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும், நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கும்** உள்ள தனித்தனி நூலகங்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் (Library Books) தேவைப் படுகின்றன. பழைய அல்லது புதிய புத்தகங்களை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்கு வழங்க விரும்பினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## இந்தி புத்தகங்கள் தேவை

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்காக** 1000 இந்தி கிறிஸ்தவ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்தி வேதாகம புத்தகங்களை (Theological Books) சேகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❁ வருட சந்தா ரூ. 100/– ❁ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th DECEMBER 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**